# பழைய மாணவர் சங்கம்
# இந்துக் கல்லூரி, கொழும்பு

**1. பெயர்** இச்சங்கம் பழைய மாணவர் சங்கம், இந்துக் கல்லூரி, கொழும்பு என்று அழைக்கப்படும்.

**2.விலாசம்** இச்சங்கத்தின் விலாசமானது 'பழைய மாணவர் சங்கம், இந்துக்கல்லூரி, கொழும்பு இலக்கம் 77 லோரன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு-04' ஆகும்.

3.**நோக்குகள்**

(i) கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து கல்லூரி மீது நன்றிக்கடனுடையவர்களாய் செயற்பட வைத்தல்.

(ii) கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிய பழைய மாணவர்களை ஒன்றிணைத்தலும் அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதலும்

(iii) சமூகத்திற்கு நன்மை பயக்கும் செயற்பாடுகளில் சங்கத்தை தொடர்புபடுத்தி உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தல்

(iv) மேற்படி (i)(ii)(iii) ஆகிய உப பிரிவுகளில் குறிப்பிட்டநோக்கங்களை அமுல்படுத்துமாறு பலவித செயற்பாடுகளையும் தொடங்கி செயற்படுத்தல்.

**4. வரைவிலக்கணங்கள்**

பழையமாணவர்கள்: இந்துக்கல்லூரி கொழும்பில் கல்வி கற்ற எல்லா மாணவர்களையும் உள்ளடக்கும்.

காப்பாளர்கள் : ஐந்துக்கும்(05) மேற்படாத சமூகத்தில் கௌரமிக்க புகழ்பெற்ற பிரபலமான பழைய மாணவர்கள், காப்பாளர்களாக இருப்பர்.

தலைவர் : கல்லூரியின் சமகால அதிபர் தலைவராக இருப்பார்.

துணைத்தலைவர்கள் : துணைத்தலைவர்களாக நான்கு பேர் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களில் நிதி, நிர்வாகம்,கல்வி, விளையாட்டு ஆகியவற்றுக்கு தனித்தனியே ஒவ்வொருவரும் பொறுப்பாக இருப்பர்.

செயலாளர் : தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் இவர் சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

பொருளாளர் : தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் இவர் சங்கத்தின் நிதிசம்பந்தமான விடயங்களுக்கு பொறுப்பாவார்.

கனிஷ்ட உறுப்புரிமை: பாடசாலையை விட்டு வெளியேறி மூன்று வருட காலத்திற்குள் சங்கத்தில் இணைபவர்கள். இவர்கள் உறுப்புரிமை ஒரு வருட காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாவதுடன், வருடாந்தம் சந்தாப்பணம் செலுத்தப்பட வேண்டியதாகும்.அவர்கள் செயற்குழுவின் சிஷேட்ட உறுப்பினர்களாக முடியாது. ஆனால் செயற்குழுவின் கனிஷ்ட உறுப்பினர்களாகலாம். அவர்களுக்கு வாக்குரிமை இருப்பதுடன், அவர்கள் கனி ஷ்ட உறுப்பினர்களாக தேர்தலில் தெரிவு செய்யப்படும் செயற்குழுவின் நடவடிக்கைகளில் பங்கு பற்றலாம்.

வருடாந்த உறுப்புரிமை: கனிஷ்ட உறுப்புரிமை தவிர்ந்த வருடாந்த உறுப்புரிமையை பெற்றுக் கொண்டவர்கள் வருடாந்த உறுப்புரிமைக்கு தகுதியானவராவர். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருப்பதுடன் செயற்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்களாகவும் இருக்கலாம்.

ஆயுட்கால உறுப்புரிமை: ஆயுட் கால உறுப்புரிமை கட்டணத்தை செலுத்தியவர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாவர். இவர்கள் வாக்களிக்க உரிமையுடையவர் களாவதுடன் செயற்குழுஉறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்படலாம்.

கௌரவ உறுப்புரிமை: கல்லூரியில் இருக்கும் அனைத்து ஆசிரியர்களும் அவர்கள் கல்லூரியில்

கடமையாற்றும் காலப்பகுதிக்கு மட்டும் சங்கத்தின் கௌரவ உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு வாக்குரிமை இல்லாததுடன் அவர்கள் செயற்குழுவின் உறுப்பினர்களாகவும் இருக்க முடியாது.

**5. உறுப்புரிமைக்கான தகுதிகள்**

(i) இந்துக்கல்லூரி கொழும்பில் படித்த அனைத்து மாணவர்களும் சங்கத்தின் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ள தகுதியுடையவராவர்.

(ii) உறுப்புரிமைக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் செயற்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

**6.உறுப்புரிமைக் கட்டணம்**

(i) ஆயுட்கால வருடாந்த மற்றும் கனிஷ்ட உறுப்புரிமை கட்டணம் செயற்குழுவின் சிபாரிசின் படி அதன் வருடாந்த கூட்டத்தில் நிர்ணயிக்கப்படும்.

(ii) வருடாந்தம் செலுத்தப்பட வேண்டிய உறுப்புரிமை கட்டணத்தை செலுத்தாதவர்கள் உறுப்புரிமையை இழப்பர்.

**7. காப்பாளர்கள்**

(i) கல்லூரியின் பழையமாணவர்களில் புகழ்பெற்ற, பிரபலமான சமூகத்தில் கௌரமிக்க, எமது பாடசாலைக்கும், தமிழ் சமூகத்திற்கோ இந்து சமயத்திற்கோ அளப்பரிய பங்களிப்புகளை செய்துள்ளவர்களின் மத்தியிலிருந்து ஆகக்கூடியது ஐந்துபேர்(05) சங்கத்தின் காப்பாளர்களாக மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படலாம். ஆயின் ஒரேயொரு புதியவர் மட்டுமே குறிப்பிட்ட ஒரு வருடாந்த கூட்டத்தில் நியமிக்கப்படலாம். (இக்காப்பு வாசகம் மீள நியமிக்கப்படுபவர்களுக்கு ஏற்புடையதாகாது.)

(ii) காப்பாளர்கள் செயற்குழுவின் இயங்குமுறை மற்றும் அதன் செயற்றிட்டங்கள் பற்றி அதற்கு வழிகாட்டுவதுடன் ஆலோசனையையும் வழங்குவதுடன் அழைப்பு விடுக்கப்படும் போது செயற்குழு கூட்டங்களிலும் கலந்து கொள்ளலாம்.

(iii) காப்பாளர்கள் இராஜினாமா செய்யும்வரை அல்லது செயற்குழுவின் சிபாரிசுக்கமைய பதவியிலிருந்து நீக்குவதற்காக கூட்டப்படும் சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டத்தின் விஷேட தீர்மானத்தினால் (2/3 பெரும்பான்மையுடன்) பதவி நீக்கப்படும் வரை பதவியில் இருப்பர்.

**8. செயற்குழு**

(i). செயற்குழுவானது சிரேஷ்ட, கனிஷ்ட ஆகிய இருவகையான உறுப்பினர்களையும் கொண்டதாக அமையும்.

(ii). செயற்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பின்வருமாறு உள்ளடங்கி இருப்பர்.

(அ). தலைவர்

(ஆ). நான்கு துணைத்தலைவர்கள்(நிர்வாகம், நிதி, கல்வி, விளையாட்டு)

(இ). செயலாளர்

(ஈ). உதவி செயலாளர்

(உ) பொருளாளர்

(ஊ) உதவி பொருளாளர்

(எ) பன்னிரண்டு குழு உறுப்பினர்கள்

(iii) செயற்குழுவின் கனிஷ்ட உறுப்பினர்கள் பின்வருமாறு உள்ளடங்கி இருப்பர்

(அ). நான்கு கனிஷ்ட துணைத்தலைவர்கள்(நிர்வாகம், நிதி, கல்வி, விளையாட்டு)

(ஆ). நான்கு குழு உறுப்பினர்கள்

**9. செயற்குழுவின் பொறுப்புகளும் கடமைகளும்**

**கடமைகள்**

(i) பிரதானமாக இவ்யாப்பின் உறுப்புரை 3ல் கூறப்பட்டுள்ள நோக்குகளை அடைய செயற்பட வேண்டும்.

(ii) மேற்குறித்த நோக்குகளை அடைவதில் இடையூறுகள் இருக்குமாயின் செயற்குழு அவற்றை சாத்தியமாக்கும் வகையில் தீர்க்க வேண்டும்.

**பொறுப்புகள்**

(i) தலைவர் கூட்டங்களுக்கு தலைமை வகிப்பார். அவர் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லையாயின் நிர்வாகத்திற்கு பொறுப்பான துணைத்தலைவர் தலைமை வகிப்பார். அவரும் சமூ கமளித்திருக்காவிடின் ஏனைய உபதலைவர்களில் ஒருவர் தலைமை வகிப்பார்.

(ii) கூட்டங்களை கூட்டுவதற்கான அறிவுறுத்தல்களை செயலாளருக்கு வழங்கும் அதிகாரத்தை தலைவரும் துணைத்தலைவர்களும் கொண்டிருப்பார்கள்.

(iii) செயலாளர் கூட்டங்களை கூட்டுவார்

(iv) செயற்குழு

சங்கத்தின் செயற்பாடுகளை நிர்வகிக்கும்.
பொதுவாகச் சேகரிக்கும் நிதியை சங்கத்தின் செயற்திட்டங்களுக்கு செலவிடுதல்.
குறிப்பிட்ட தேவைகளுக்காக சேகரித்த நிதியை குறித்த வேலைகளுக்காகப் பயன்படுத்தல் .

அனைத்து செயற்பாடுகளையும் நிர்வகிப்பதுடன் குறித்த தேவைக்காக சேகரிக்கப்படும் நிதியை செலவிடுவதற்கும் பொறுப்பாகும்.

(v) பின்வரும் உறுப்புரை 13ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்காக செயற்குழுவினால் உபகுழுக்கள் நியமிக்கப்படலாம்.

(vi) செயற்குழுவின் பதவிகாலத்தில் உறுப்பினர் வெற்றிடம் ஏற்படும் போது பொருத்தமான உறுப்பினரை கொண்டு அவ்வெற்றிடங்களை செயற்குழு நிரப்பலாம்.

(vii) சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர்கள் எவரும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக இச்சங்கத்தைப் பயன்படுத்த முடியாது. செயற்குழு உறுப்பினர் ஒருவர் சங்கம் அல்லது பாடசாலை மேற்கொள்ளும்/மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பரிமாற்றத்தில் மற்ற தரப்பில் தனக்குள்ள ஈடுபாட்டை முறையாக வெளிப்படுத்தி செயற்குழுவின் ஒருமித்த ஒப்புதலுடன் அப்பரிமாற்றத்தில் செயற்பட வேண்டும்.

## 10. செயற்குழுவின் கூட்டங்கள்

(i) கூடிய மட்டும் கூட்டங்கள் பாடசாலை கட்டிடங்களிலேயே நடத்தப்படவேண்டும்.

(ii) ஆகக்குறைந்தது 2 மாதங்களுக்கு ஒருமுறையாவது செயற்குழு கூட்டம் நடத்தப்பட வேண்டும். கூட்டங்கள் நடைபெற ஏழு நாட்களுக்கு முன்பு அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

(iii) கூட்ட அறிக்கைகளை செயலாளர் பதிவு செய்ய வேண்டும்.செயற்குழுவின் இணக்கத்துடன் சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகள் பற்றியுமான வருடாந்த அறிக்கையை சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் செயலாளர் சமர்ப்பிப்பார்.

(iv) சங்கத்தின் வருமானம் மற்றும் செலவு கணக்குகள், வங்கியின் இருப்பு, கடன்கள் மற்றும் கொடுப்பனவுகள் போன்றவற்றை

உள்ளடக்கியதான நிதி அறிக்கையை செயற்குழு கூட்டங்களில் பொருளாளர் சமர்ப்பிப்பார்.

**11. செயற்குழுவின் உத்தியோகத்தவர்களின் பதவிநிலைகளுடன் தொடர்புடைய பொறுப்புகள்**

(i) தலைவர்: செயற்குழுவின் செயற்பாடுகளுக்கு தலைமை வகிப்பார்.

(ii) துணைத்தலைவர்கள்: தெரிவு செய்யப்படும் நான்கு துணைத்தலைவர்களும் தனித்தனியே நிர்வாகம், நிதி, கல்வி, விளையாட்டு ஆகியவற்றுக்கு பொறுப்பாவர். செயற்குழுவின் சம்மதத்துடன் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்படும் நிரந்தர உபகுழுக்களுக்கு தலைமை வகிப்பார்.

செயலாளர்: செயற்குழுவின் பணிப்பின் கீழ் செயற்படும் இவர் சங்கத்தின் அமைப்பு, செயலகம் தொடர்டபான எல்லா விடயங்களுக்கும் பொறுப்பாவார். செயற்குழு கூட்டங்களை கூட்டுவார். சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய அறிவித்தல்களை வழங்குவார். சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை பேண கடமைப்பட்டவராவார். சங்கத்துடன் தொடர்புடைய அனைத்து தொடர்பாடல் ஆவணங்களையும் அவை அனுப்பப்பட்டவுடன் அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் அதற்கமைவாக அடுத்து கூடுகின்ற செயற்குழு கூட்டத்தில் அவற்றை சமர்ப்பிப்பார்.

பொருளாளர்: சங்கத்தின் நிதிக்கு பொறுப்பாவதுடன் வரவு, செலவு தொடர்பான நிதி அறிக்கைகளை சரியாகவும் முறையாகவும் பேண வேண்டும்.தேவைப்படுகின்ற நிதி அறிக்கைகளை செயற்குழு கூட்டங்களிலும் சங்கக்கூட்டங்களிலும் சமர்ப்பிப்பார். நிதி அறிக்கையை கணக்காய்வுக்குட்படுத்தி வருடாந்த நிதி அறிக்கையை வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பார்.

உதவி செயலாளர்: செயலாளருக்கு அவரின் அலுவல்களை செய்வதற்கு உதவுவதுடன் அவரில்லாதவிடத்து அவருக்காக பதில் கடமையாற்றுவார்.

உதவி பொருளாளர்: பொருளாளருக்கு அவரின் அலுவல்களை செய்வதற்கு உதவுவதுடன் அவரில்லாதவிடத்து அவருக்காக பதில் கடமையாற்றுவார்.

(iii) கனிஷ்ட துணைத்தலைவர்கள்: இவர்கள் துணைத்தலைவர்களுக்கும் செயலாளருக்கும் பொருளாளருக்கும் உதவுவதுடன் அவர்களுக்கு நிழலாக செயற்படுவதுடன் அவர்களது நடவடிக்கைகளை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடனும் ஒருங்கிணைப்பார்

12. **செயற்குழுவின் உபகுழுக்கள்**

(i) நிரந்தர உபகுழுக்கள்

செயற்குழு பின்வரும் நிரந்தர உபகுழுக்களை முறையே அதற்கு பொறுப்பான துணைத்தலைவர்களின் தலைமையில் அமைக்கும்

(அ). நிதிக்கான உபகுழு

(ஆ). நிர்வாகத்துக்கான உபகுழு

(இ). கல்விக்கான உபகுழு

(ஈ). விளையாட்டுக்கான உபகுழு

(ii) வருடாந்த பொதுகூட்டத்திற்கு பிறகு கூடும் முதலாவது செயற்குழு கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்களிலிருந்து நிரந்தர உபகுழுக்கள் அமைக்கப்படும்.

(iii) திட்ட உபகுழுக்கள்

சங்கத்திற்கு நிதி சேகரித்தல், கலாசார காட்சிகள், மற்றும் சங்கத்தின் நோக்கங்களுக்கு மேலதிகமான ஏனைய நடவடிக்கைகள் உட்பட சங்கத்தின் விஷேட திட்டங்களை முன்னெடுப்பதற்காக சமயோசித அடிப்படையில் திட்ட உபகுழுக்களை செயற்குழு அமைக்கலாம். திட்ட உபகுழுக்களுக்கு திட்டத்தின் விடயங்களில் நிபுணத்துவ திறனுடைய அல்லது விஷேட அறிவுடைய செயற்குழு உறுப்பினர்கள் சங்கத்தின் சாதாரண உறுப்பினர்கள் மற்றும் பாடசாலையினுடைய ஆசிரியர்கள் ஆகியோர் செயற்குழுனால் முறையாக நியமிக்கப்படுவார்கள்.

எந்தவொரு திட்ட உபகுழுவிற்கும் செயற்குழு உறுப்பினர் ஒருவர் தலைவராக/இணைப்பாளராக இருப்பார்.

(iv) நிரந்தர உபகுழுக்கள் மற்றும் திட்ட உபகுழுக்கள் அவற்றின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை செயற்குழு கூட்டங்களில் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் அவ்வறிக்கைகள் உபகுழுவின் தலைவரினால் முறையாக கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும்.

(v) பதவிக்காலம்

தலைவரைத் தவிர ஏனைய உத்தியோகத்தர்கள் (துணைத்தலைவர்கள் , செயலாளர் , பொருளாளர்) இடைமுறிப்பின்றி தொடர்ச்சியாக மூன்று பதவிக்காலத்திற்கு மேல் பதவி வகிக்க முடியாது. ஆனால் அவர்கள் செயற்குழு உறுப்பினர்களாக இருக்கலாம்.

**13. செயற்குழு உறுப்பினர்கள் பதவி இழக்கும் சந்தர்ப்பங்கள்**

வருடாந்த பொதுக்கூட்டத்தில் ஏதாவதொரு பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அவர் கீழ் காணும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலன்றி அடுத்த வருடாந்த பொதுக்கூட்டம் வரை அப்பதவியில் இருப்பார்.

(அ). மரணித்தல்

(ஆ). இராஜினாமா செய்தல்

(இ). சித்த சுவாதீனமற்றவராக முடிவு செய்யப்பட்டால்

(ஈ). அவரின் நடத்தை யாப்பிற்கு முரணாக இருந்தால் அதைப்பற்றி செயற்குழுவின் விஷேட கூட்டத்தில் அவருக்கு அறிவிக்க வேண்டியதுடன், அவர் அவரது குறித்த நடத்தை பற்றி செயற்குழு திருப்தியடையும் வகையில் விளக்கமளிக்க தவறினால் செயற்குழு, அவ் விஷேட கூட்டத்திற்கு வருகை தந்திருப்போரில் 11 உறுப்பினர்கள் சார்பாக வாக்களித்தருபின் அவரது பதவியை முடிவுறுத்தலாம். அவரின் பதவி முடிவுறுத்தப்பட்டதிலிருந்து நியாயமான காலத்திற்குள் இதற்கென விசேடமாக கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் இதுபற்றி அறிவிக்கப்பட வேண்டும்.

(உ). தொடர்ச்சியாக செயற்குழுவின் மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காமல் அதற்கான காரணத்தை முன்கூட்டியே அறிவிக்காமல் விட்டால் சமூகமளிக்காமைக்கான காரணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் செயற்குழு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது.

**14. வழங்கல்**

உறுப்புரை 3ல் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு செயற்குழுவானது தனது சுய விருப்பின் படி வழங்கல்களை சேகரிக்க ஒரு பிரேரணையைக் கொண்டு வரும் அதிகாரம் உண்டு. வழங்கலுக்குரிய விண்ணப்பங்கள் அல்லது கோரிக்கைகள் யாவும் துணைத்தலைவர்களில் யாராவது ஒருவரது கையொப்பத்தை கொண்டிருக்க வேண்டும்.

**15. நிதி**

(i) சேகரிக்கப்படும் பணம் யாவும் இந்துக்கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கம் என்ற பெயரில் சேகரிக்கப்பட வேண்டும்.தனிநபர் அல்லது தனியாளின் பெயரிலோ அல்லது இந்துக் கல்லூரி கொழும்பு என்ற பெயரிலோ சேகரிக்கப்படலாகாது.

(ii) உறுப்புரிமை கட்டணம், நன்கொடைகள் மற்றும் கட்டணங்கள் பழைய மாணவர் சங்க பொருளாளரிடம் கொடுக்கப்படல் வேண்டும் அல்லது சங்கத்தின் நியமிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் அல்லது கணக்குகளில் வைப்பிலிட வேண்டும்.

(iii) எல்லா கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொருளாளர் பற்றுச் சீட்டுக்களை கொடுக்க வேண்டும்.

(iv) இந்தப் பணத்தை செயற்குழுவானது இலங்கையிலுள்ள ஏதாவது ஒரு வங்கியில் வைப்புச் செய்யலாம். பணத்தை மீளப்பெறுவதற்கான காசோலைகளிலும் காசுக்கட்டளைகளிலும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மூ வரும் கையெழுத்திட வேண்டும்.

(அ). தலைவர்

(ஆ). துணைத்தலைவரகளில் ஒருவர்

(இ). பொருளாளர்

(v) பணத்திற்கான காசோலைக் கொடுப்பனவுகளில் கையெழுத்து வைக்கும்போது அக்காசோலைகள் செயற்குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுச் சீட்டுக்களாக இருக்கும் பட்சத்திலேயே கொடுப்பனவு செய்யலாம்.

(vi) குறித்த தேவைக்காக திரட்டப்பட்ட நிதி குறித்த தேவைக்காகவே பயன்படுத்த வேண்டும். குறித்த தேவை வேறு விதத்தில் பூர்த்தி செய்யப்பட்டாலோ அல்லது தேவையற்றுப்போனாலோ அல்லது வேறேதும் அவசரகால நிலை ஏற்பட்டாலோ சார்புற்ற வழங்குனரின் அனுமதியுடன் செயற்குழுவின் ஒப்புதலுடனும் அந்நிதியை இனங்காணப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தலாம்.

(vii) சங்கத்தின் நிதியாண்டு ஒவ்வொரு வருடத்தின் தை முதல் மார்கழி வரையுமான காலப்பகுதியாகும்.

**16. நிதி ஆய்வுகள்**

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் வருடாந்த நிதியையும் பதிவுப் புத்தகங்கள், பதிவுகள் சரியாக உள்ளதா என மதிப்பீடு செய்ய தகுந்த கணக்காய்வாளர்களை நியமிக்க வேண்டும்.

**17. விடயப்பதிவுகளும் நிதியறிக்கைகளும்**

செயற்குழுவானது சங்கத்தின் விடயங்களை பதிவு செய்து வைத்திருப்பதுடன் நிதி சம்பந்தமான புத்தகங்களை தொடர்ந்து பேணல் வேண்டும்.

**18.வருடாந்த அறிக்கை**

(i) சங்கத்தின் வருடாந்த நிதியறிக்கை தயார் செய்யப்பட்டு அதனை செயற்குழு அங்கத்தவர்களுக்கும் பின்னர் அதனை பழைய மாணவர்களின் பார்வைக்கும் வைக்கப்பட வேண்டும். இவ்வறிக்கையானது வருடாந்த பொதுகூட்டத்திற்கு இரு வாரத்திற்கு முன்னதாக இருக்க வேண்டும். இந்நிதியறிக்கையானது நிதிப்பரிசோதனையின் முன் செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். பின்னர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ii) சங்க செயற்பாடு, கட்டமைப்புக்கள் பற்றிய வருடாந்த அறிக்கை செயற்குழுவின் அங்கீகாரத்துடன் செயலாளரால் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**19. கூட்டநிறைவெண்**

(i) எந்தவொரு செயற்குழு கூட்டத்திற்குமான நிறைவெண் 7 பேராகும்

(ii) வருடாந்த பொதுக்கூட்டத்திற்கான நிறைவெண் 30 பேராகும்

**20. நிறைவேற்று அதிகாரம்**

(i) செயற்குழுவின் எல்லாத் தீர்மானங்களும் பெரும்பான்மை வாக்குகள் எதற்குச் சார்பாக உள்ளதோ அதற்கமையவே எடுக்கப்படும்.

(ii) ஒரு விடயம் சம்பந்தமாக இருபக்கமும் சம அளவு வாக்கு காணப்படும் சந்தர்ப்பத்தில் தலைவரினது முன்மொழிவிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**21. வருடாந்த பொதுக்கூட்டம்**

(i) கல்லூரி மாசி மாதத்தில் தாபிக்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் பாரம்பரியமாக மாசி மாதத்திலேயே வருடாந்தப் பொதுக்கூட்டம் நடாத்தப்படும்.

(ii) வருடாந்த கூட்டம் வருடம் தோறும் தவறாமல் கூட்டப்படல் வேண்டும்.அங்கத்தவர்களுக்கு 30 நாட்களுக்கு முன்னரே முன்னறிவிப்பு வழங்கப்படல் வேண்டும்.

(iii) செயற்குழுவின் அறிவித்தலுடன் செயலாளரினால் விஷேட பொதுக்குழு கூட்டப்படும்.

(iv) வேறெந்த விஷேட பொதுக்கூட்டமும் கூட்டப்படும் போது 10 நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தல் வேண்டும்.

**22. தேர்தல்**

(i) இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நான்கு துணைத்தலைவர்கள், செயலாளர், பொருளாளர் மற்றும் 4 கனிஷ்ட துணைத்தலைவர்களுக்கான நியமனப்பத்திரங்கள் செயற்குழுவினால் கோரப்பட்டு வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு இரு வாரங்களிற்கு முன்னர் செயலாளரை சென்றடையும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது தலைவரிடமோ செயலாளரிடமோ நேரடியாக கையளிக்கலாம்.

(ii) ஆண்டு பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தல் கொடுக்கும் போது மேற்படி நியமனப்பத்திரங்கள் பெறுவதற்கான கடைசித் திகதியொன்றையும் செயலாளர் குறிப்பிட வேண்டும்.

(iii) மேற்படி நியமனப்பத்திரங்களை செயலாளர் பெற்றவுடன் செயற்குழுவின் அங்கீகாரம் பெற சமர்ப்பிக்க வேண்டும். செயற்குழுவின் அங்கீகாரம் பெற்ற நியமனங்களே ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(iv) நான்கு பேருக்கு மேற்பட்டவர்கள் உபதலைவர்களுக்கான நியமனப்பத்திரங்கள் அனுப்பி இருப்பின் ஆண்டு பொதுக் கூட்டத்தில் வாக்கெடுப்பின் மூலம் உபதலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்

(v) ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு சமூகம் அளிக்காத உறுப்பினர் தாம் ஏற்கனவே அதற்கான காரணத்தை எழுத்து மூலம் சமர்ப்பித்திருந்தாலன்றி செயற்குழுவில் பதவி வகிக்க தேர்ந்தெடுக்கப்படும் தகுதியை இழப்பர்.

(vi) ஒருவர் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினராகி ஒரு ஆண்டின் பின்னர்தான் செயற்குழுத் தேர்தலில் போட்டியிட முடியும். இது கனிஷ்ட உறுப்பினருக்கு விதிவிலக்காகும்.

(vii) மேலே குறிப்பிட்டது போன்று நியமனப்பத்திரங்கள் அனுப்பப்படாத சந்தர்ப்பங்களில் வருடாந்த பொதுகூட்டத்தன்று

துணைதலைவர்கள் பொருளாளர், செயலாளர், செயற்குழு உறுப்பினர் மற்றும் கனிஷ்ட துணைத்தலைவர்கள் செயற்குழுவின் கனிஷ்ட உறுப்பினர்கள் போன்றோர் சமுகமளித்திருப்போரில் இருந்து முன்மொழியப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

**23. பிரேரணைகள்**

(i) பொதுக்கூட்டத்தில் ஒருவர் ஒரு பிரேரணையை முன்வைக்க கருதினால் அக்கூட்டம் நடைபெறுவதற்கு குறைந்தது இருவாரங்களுக்கு முன்னர் அதுபற்றி செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ii) மேற்படி பிரேரணைகள் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் ஆராயப்பட வேண்டும்.

**24. யாப்பு விதிகள்**

(i) சங்கத்தின் யாப்பு விதிகளில் மாற்றம் கொண்டு வரவேண்டின் ஒரு பிரேரணை பொதுக்கூட்டத்தில் அல்லது விஷேட பொதுக்கூட்டத்தில் கொண்டு வரப்பட்டு அங்கு சமுகம் அளித்தோரில் மூன்றிலிரண்டு பங்கினர் பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தல் வேண்டும்.

(ii) இவ்விதிகளுள் அடங்காத விதிகள் பற்றிய முடிவுகளை செயற்குழுவினர் ஆராய்ந்து எடுப்பர்.

**25. சங்கத்தின் இந்த யாப்பின் தமிழ் உரையே மூலமாக கொள்ளப்படுவதுடன் ஆங்கில உரைக்கு மேலானதாக கொள்ளப்படும். ஆங்கில மொழிபெயர்ப்பு வசதிக்காகவே விநியோகிக்கப்படுகிறது.**